DEPOSITION OF WITNESS.

IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, SIVAGANGAI

Spl.SC.No. 73/2024 & Spl.SC.90/2024

PROSECUTION WITNESS No - PW- 1

| | |
|---|---|
| Name : சிவபாலசுப்பிரமணியன் | Caste: |
| Father Name | Calling: |
| Village: | Religion: |
| Taluk: | Age: |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the $11^{th}$ day of November 2025.

2வது, 4வது எதிரிகள் நீதிமன்றத்தில் நேரில் ஆஜர். 1வது, 3வது எதிரிகள் ஆஜரில்லை. அவர்களுக்காக மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**முதல் விசாரணை :**

1) நான் தற்போது இளையான்குடி தாலுகா, பெரும்பச்சேரி கிழக்கு குரூப் கிராமநிர்வாக அலுவலராக பணியாற்றி வருகிறேன். ஆஜராகியுள்ள எதிரிகளை தெரியும். கடந்த 2019ம் வருடம் மானாமதுரை வட்டம் சிறுகுடி கிராமநிர்வாக அலுவலராக பணியிலிருந்தபோது 30.03.2019ம் தேதி காலை சுமார் 6.00 மணியளவில் நானும் எனது கிராமஉதவியாளர் ராஜமாணிக்கம் என்பவரும் பணியிலிருந்தபோது தொலைபேசி மூலமாக வேலூர் உப்பாற்றுபகுதியில் திருட்டுத்தனமாக மணல் அள்ளுவதாக கிடைத்த தகவலின் பேரில் அய்யனார் கோவில் பின்புரம் சென்று பார்த்தபோது TN37V4413 என்ற பதிவெண்கொண்ட அசோக்லேலாண்ட் லாரியும், TN63VE0564 என்ற பதிவெண்கொண்ட Hero Splendor இருசக்கர வாகனமும் அந்த இடத்தில் இருந்த நிலையில் மேற்குறிப்பிட்ட லாரியில் மணலை அள்ளிக்கொண்டிருந்த ராஜா, ராஜேஸ்வரன், செல்வராஜ், சேகர் ஆகிய நபர்கள் அங்கிருந்து தப்பி ஓடி ஊருக்குள் சென்றவர்களை நாங்கள் அவர்களின் பெயர் விலாசம் தெரிந்துகொண்டு கிராமத்திற்கு அழைத்துச்சென்று மேற்குறிப்பிட்ட எதிரிகளுடன் கைப்பற்றிய TN63VE0564 என்ற பதிவெண்கொண்ட Hero Splendor இருசக்கர வாகனத்தை காவல்நிலையத்தில் ஒப்படைத்து நான் புகார் கொடுத்தேன். இங்கு என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான் மேற்படி புகார் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேலும் அன்றைய தினமே பகல் 12.15 மணியளவில் 1வது எதிரி ராஜா(எ) ராஜாசேர்வை தாமாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்கு மூலம் கொடுத்து எங்கள் முன்னிலையில் பதிவு செய்து என்னிடம் சாட்சி கையொப்பம் பெற்றார். இங்கு காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம்

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2025.11.11 16:28:39 +0530

என்னுடையதுதான். மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ. 2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேலும் காவல்நிலையத்தில் இருசக்கர வாகனத்தை ஒப்படைத்தபோது என் முன்னிலையில் அத்தாட்சி தயாரிக்கப்பட்டு அதில் நான் சாட்சி கையொப்பம் போட்டுள்ளேன். மேற்படி அத்தாட்சி **அ.சா.ஆ. 3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இங்கு காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள அத்தாட்சியில் குறிப்பிடப்பட்டுள்ள TN63VE0564 என்ற பதிவெண்கொண்ட Hero Splendor இருசக்கர வாகனம் சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

இவ்வழக்கு சம்மந்தமாக ஆய்வாளர் என்னை எங்கு வைத்து எந்த தேதியில் விசாரித்தார் என்றால் 30.03.2019ம் தேதி பகல் சுமார் 12.00 மணியளவில் காவல்நிலையத்தில் வைத்து என்னை ஆய்வாளர் விசாரித்தார். அதன்பிறகு என்னை ஆய்வாளர் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். என்னுடைய கிராமநிர்வாக அலுவலகம் எங்கு உள்ளது என்றால் சிறுகுடியில் உள்ளது. தொலைபேசி மூலம் தகவல் கிடைத்த விபரம் பற்றி புகாரில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். யார் மூலம் தகவல் கிடைத்தது என்ற விபரம் பற்றி புகாரில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எனது மேல் அதிகாரிக்கு நான் வேறு பணிக்கு செல்லும்போது எழுத்து மூலமாக புகார்கொடுக்க வேண்டும் என்றால் சரிதான். போன் மூலம் தகவல் சொன்னேன். மேற்படி விவரத்தை ஆய்வாளரிடம் சொல்லவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் ஈடுபட்டதாக சொல்லப்படும் நான்கு எதிரிகளும் என் நிர்வாக வரையறைக்குள் வரவில்லை என்றால் சரிதான். மேற்படி எதிரிகளின் குடும்ப விவரம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எனக்கு முதன்முதலில் எத்தனை மணிக்கு சம்பவம் பற்றி தகவல் கிடைத்தது என்றால் 6 மணிக்கு தகவல் கிடைத்தது. சம்பவ இடத்திற்கும் என் அலுவலகத்திற்கும் இடையே எவ்வளவு தூரம் என்றால் சுமார் 6கிமீ தூரம் இருக்கும். சம்பவ குறித்து நான் உடனடியாக காவல்துறைக்கு தகவல் சொன்னேனா என்றால் இல்லை. சம்பவ இடத்திலிருந்து அலுவலகத்திற்கு எந்த வாகனத்தில் சென்றேன் என்றால் கிராமஉதவியாளரின் இருசக்கர வாகனத்தில் சென்றேன். மணல் அள்ளப்பட்டதாக சொல்லப்படும் இடத்தின் சர்வேஎண், விஸ்தீரணம் குறித்து புகாரிலும், விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். மணல் அள்ளியதற்கான ஆதாரத்திற்கான மணலுடன் கூடிய புகைப்படம் எதுவும் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். அத்தாட்சியில் கைப்பற்றிய லாரி மற்றும் இருசக்கர வாகனத்தின் உரிமையாளர்

யார் என்று தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. அது குறித்து ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். லாரியில் இருந்த மணலின் அளவு குறித்து புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். ஆனால் விசாரணையில் அரை யூனிட் என்று சொல்லியுள்ளேன். மணலின் அளவீடு குறித்து கனிமவள அதிகாரியிடம் சான்று எதுவும் பெற்றேனா என்றால் இல்லை. புகாரில் உள்ள கையொப்பம், ஒப்புதல்வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் மற்றும் அத்தாட்சியில் உள்ள கையொப்பம் அனைத்தும் வேறுபட்டு காணப்படுகிறது என்றால் சரியல்ல. அத்தாட்சியிலும் ஒப்புதல்வாக்கமூலத்திலும் உள்ள கையொப்பம் என்னுடைய கையொப்பம் இல்லை என்றால் சரியல்ல. ஒப்புதல் வாக்கு மூலத்தில் என்னுடைய சாட்சி கையொப்பம் தவிர வேறு யாருடைய கையொப்பமும் பெறப்படவில்லை என்றால் சரிதான். நான் காவல்நிலையத்தில் எத்தனை மணிக்கு புகார் கொடுத்தேன் என்றால் பகல் 12.00 மணிக்கு புகார் கொடுத்தேன். மணல் அள்ள பயன்பட்டதற்கான எவ்வித உபகரணங்களையோ வாகனங்களையோ குறிப்பிட்டு நான் புகாரிலோ, விசாரணையிலோ சொல்லவில்லை என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் சொன்ன நேரத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும் புள்ளிவிவர கணக்கிற்காக பின்யோசனையின் பேரில் தயாரிக்கப்பட்ட புகாருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. கைப்பற்றியதாக சொல்லும் வாகனத்தை யார் மூலம் காவல்நிலையம் கொண்டுசென்றோம் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். முதல்விசாரணையில் சொல்லியதுபோல் எதிரிகள் ஊருக்குள் ஓடிவிட்டதாகவும் விவரம் கேட்டு அவர்களை ஊரில் சென்று அழைத்து வந்து அவர்களுடன் சென்று புகார் கொடுத்ததாக புகாரிலும், விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். என் முன்னிலையில் எதிரி எவ்வித ஒப்புதல்வாக்குமூலமும் கொடுக்கவில்லை, எவ்வித அத்தாட்சியும் தயாரிக்கவில்லை என்றும், எந்த வாகனமும் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**. இல்லை

சாட்சி கூறியதை என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டி, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2025.11.11 16:28:45 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
சிவகங்கை